# இரட்சணிய மனோகரத்தில் இறை(வனின்)நேயம்

*முனைவர் சு. பெர்சியா ஜீவபாய்*
உதவிப்பேராசிரியை, தமிழ்த்துறை
மகளிர் கிறிஸ்தவக்கல்லூரி,சென்னை

**மலர்: 11**

**சிறப்பிதழ்: 2**

**மாதம்: ஜூலை**

**வருடம்: 2023**

**P-ISSN: 2321-788X**

**E-ISSN: 2582-0397**

**DOI:**
https://doi.org/10.34293/sijash.v11iS2i2-July.6474

*அன்பு என்பது மனித இனத்தின் ஒரு மொழி. அதனை வெளிப்படுத்த முடியவில்லையென்றாலும் ஒவ்வொருவராலும் உணர முடியும். மனித அன்பு மாறக்கூடியது. ஒருவர் மீது ஒருவர் அளவு கடந்த பாசம் வைத்திருந்தாலும், ஒரு சில தருணங்களில் ஒவ்வொருவருடைய அன்பும் மாறிப் போவதைக் கண்களால் காணமுடிகிறது. கடவுளின் அன்பு மாறாதது. கடவுள் மனிதர்கள் ஒவ்வொருவரையும் நேசிக்கிறார். கடவுள் மனிதர்கள் மீது கொண்டிருக்கும் அன்பிற்கு பதிலாக, மனிதர்களால் எதையும் திருப்பிச்செலுத்த முடியாது. அவரவருடைய மனதை மட்டுமே சொந்தமாகக் கடவுளிடம் ஒப்படைக்க முடியும். ஒருமுறை இறைவனிடம் கொடுத்து விட்டால், இறைவனின் அன்பை முழுமையாக உணர முடியும். இறைவன் மனிதர்களை நேசிக்கிறார் என்ற உணர்வு ஏற்படும்போது அவரது பாதுகாப்பை உணர முடிகிறது. அதனால் அடுத்தவர் நலனிலும் அக்கறை காட்ட முடிகிறது. இரட்சணிய மனோகரத்தில் இறைவனின் அன்பு குறித்து ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.*

## தாயினும் மேலான அன்பு

இந்த உலகத்தில் தாயின் அன்புக்கு நிகராக நாம் எதையும் கூற முடியாது. தாய் தன் குழந்தையைப் பாதுகாத்து வருபவள். தன் குழந்தைகள் தவறு செய்தாலும் அதை மன்னித்து மறப்பவள் தாய். ஒவ்வொரு நாளும் குற்றம் செய்து கோபத்தையும் சாபத்தையும் மனிதர்கள்சேர்த்துக் கொண்ட பொழுதும், நாயை விட கீழான நன்றி கெட்ட குணமுடைய மனிதர்கள் மீதும்கூட தாயை விட நூறுகோடி மடங்கு அன்பு செலுத்த கூடியவன் இறைவன் என்பதை,

***நாயி னும்கடை யேனெனைத்***
***தாயி னும்சத கோடிபங்***
***காய அன்புகொண் டாண்டனை***
***சேய னேதிரி யேகனே*** ***22***

என குறிப்பிடுகிறார். ஒவ்வொரு நாளும் மக்கள் விரும்புவதைத் தந்து அவர்களை மகிழச்செய்யும்அன்பு இருந்ததை அறிய முடிகிறது.

**விண்ணுலகத்திலிருந்து மண்ணுலகம் வந்த தேவ அன்பு**

விண்ணுலகத்திலிருந்து மண்ணுலக மக்களின் துன்பங்களைக் கண்டு மனம் உருகியவர். அவர்களின் மகிழ்ச்சி நிறைந்த வாழ்க்கைக்காக மண்ணுலகம் வந்தவர். அதனால் சிறந்த தூய மனித வடிவம் எடுத்தவர். மனித வடிவில் வந்து மக்களுக்காக உதவியவர்.

**உயிரைக் கொடுத்த அன்பு**

உலக மக்களைப் பாவங்களினின்று மீட்டு எடுப்பதற்காக ஒரு மீட்பராக மண்ணுலகு வந்தவர். சிலுவையில் மரித்தவர். மக்களின் அறியாமையினால் வரக்கூடிய பலவீனத்தை இறைவன் தன்னுடைய மனதில் நினைத்து இதுவரை செய்த குற்றங்களையும் இனிக்காண இருக்கின்ற குற்றங்களையும் பொறுத்து பாதுகாக்கக் கூடியவர் என்பதை,

**உண்டுபட்ட வென்மடமையும் பலவீன முந்திருவுள்ளத்தே**
**கொண்டருட் குமரேசன் புண்ணியமொன்றையே குறிக்கொண்டெனில்**
**கண்ட காண்கிற காணுமென்பிழையாவை யுங்கணக்கேற்றிடா**
**அண்டர் நாயக பொறுத்திரட்சை நல்ககில லோக சர்வேசனே.**

***362***

இதனையெல்லாம் சிலுவையிலே தன்னை பலியாக ஒப்புக் கொடுத்ததினால் தான் இயேசுவால் செய்ய முடிந்தது. தன்னுடைய உயிரைத் தந்ததுமல்லாமல் உயிரோடு எழுந்தவர். மக்களின் மீது கொண்ட அன்பினால் இன்றளவும் அவர்களுக்குத் தேவையான அனைத்தையும் வழங்கி வருகிறார்.

**விடுதலை தரும் அன்பு**

அறிவுள்ள நூல்கள் எல்லாவற்றையும் படித்து அறிந்தாலும், நல்ல செயல்களைச் செய்து தூய்மையான ஒழுக்கத்தைச் சிறு வயதிலிருந்து கடைபிடித்து வந்தாலும், பிறவியிலேயே பின் தொடர்ந்து வருகின்ற குணங்கள் தாயின் வயிற்றிலே கரு தோன்றும் போது, உண்டாகும் நஞ்சு போன்று குழந்தை வளரவளர உடலிலும், மனதிலும் நீங்காத துன்பத்தைத் தரும். அந்தத் துன்பம் மாறுவதற்கு இயேசு பெருமான் தன்னையே தியாகமாகக் கல்வாரி சிலுவையில் தந்த அன்பு விடுதலை தரும்.

**ஆன்மநோயகற்றுசஞ்சீவியன்பர்க்குத்**
**தேனிலுமினியதீஞ்சுவையதெள்ளமிர்து**
**ஊன்மனத்திருள்கெடவொளிருமொண்சுடர்**
**வானவர்கோமகன்மதுரவாய்மொழி.**

***200***

**வீடுபேற்றுக்குஅழைத்துச் செல்லும் அன்பு**

ஒவ்வொரு நாளும் ஒரு மனிதன் தன்னுடைய எண்ணங்களைத் தூய்மைப்படுத்த வேண்டும். அந்த எண்ணங்கள் தூய்மையானதாக இல்லையெனில் ஒருவர் பேசுகின்ற வார்த்தையில் குற்றம் காணப்படும். ஒருவர் செய்யும் செயலிலும் தீமையே உண்டாகும். அப்படிப்பட்ட காரியங்களைச் செய்து இறைவனின் அன்பை விட்டு தூரமாய் விலகிப் போகும் போதும் கூட இறைவன் மனிதனிடம் அதிகமாய் அன்பு செலுத்திக் கொண்டே இருக்கிறார். அதனால் தான் மனிதர்களின் தவறுக்கு தண்டனை நல்காமல் மண்ணுலகிலிருந்து விண்ணுலகிலுள்ள வீடு பேற்றுக்கு அழைத்துச் சென்று அருள்புரியக் கூடியவர்.

**வித்தகம் தயைபொறைவி நயம் தண்ணளி**
**சத்தியம் புனித மெய்த்தருமம் பத்தியென்று**
**இத்தகு சீலர் நட்பினி தினாற்றிநீர்**
**உத்தம வழித் துணையாய்க் கொண்டோடுமின்.**

***472***

மனிதர்கள் அறம், பொருள், இன்பம், வீடுபேறு என்னும் நாற்பொருளின் உண்மை நெறியினைத் தவறாமல் கடைப்பிடிக்க இறைவனின் அன்பு உதவுகிறது. தீமைகளைப் பிறர் நமக்கு உணர்த்தும் போது, அதனைச் செய்யாமல் நன்மை செய்ய முயலும் போது இறைவன் வீடு பேற்றினை நல்குவார்.

### பயத்தை நீக்கும் அன்பு

மரணம் என்பது மனித வாழ்வின் கடைசி முடிவு, மனிதர்களுக்கு மரணம் என்பது பயத்தை உண்டாகி விடும். மரணம் என்பது துக்கம், துன்பம், துயரம், இடைவிடாத இடையூறு இவற்றினால் வரக் கூடிய ஒன்று. மரணம் இயல்பாகவும் நடைபெறுகிறது. ஒரு மனிதனை மரணம் நெருங்கும் போது உடலின் சீரான நிலையில் மாற்றம் ஏற்படும். அறிவு மயக்கம் அடையும். மரணத்தை நினைத்து சோர்வு உண்டாகும். மெய், வாய், கண், மூக்கு ,செவி ஆகிய ஐம்பொறிகளும், சுவைத்தல், காணுதல் ,முகர்தல், கேட்டல் ஆகிய ஐம்புலன்களும் அலைவுபடும். மனம், புத்தி, சித்தம், அகங்காரம்ஆகிய உறுப்புகள் அழிந்து போகும். உயிரும் ஒடுங்கும். உடலும் இல்லாமல் போய் விடும். மரணத்தை நினைத்து மனம் துடித்து ஏக்கமுற்று இருக்கின்ற மனிதர்களுக்குப் பாதுகாப்பான அரண் இயேசு கிறித்துவே என்று அவருடைய அருளை உள்ளத்தில் உண்டாக்குவதைப் பற்றி குறிப்பிட்டுள்ளார். மைதீட்டப்பட்ட கண்கள் இருளடைந்து செவியும் வாயும் செயலிழந்து நாவு தடுமாறி கபம் கட்டி, மூச்சு நின்று உடலை விட்டு உயிர் பிரியும் நாளில் வருந்தாதே!உன்னைக் கைவிட மாட்டேன். பயப்படாதே என்று கூறிய இயேசுவை விட அன்புடைய ஒருவரை காண முடியாது.

**மையார்கண்ணிருண்டுசெவி வாயடைத்துக் குழறி**
**ஐயால்மூடுச் சொடுங்கிஉயி ராக்கைவிட் டேகிடுநாள்**
**நையேல்கை நெகிழேனு னைநான்உண் ஞ்சலெனு**
**ஐயாவுன்னை யயிலாலெனக் காட**
**ஆணை யாருறவே”**

***315***

### பாவ இருளை மாற்றும் அன்பு

நில உலகத்திலுள்ள மக்கள் நல்ல வாழ்வு அடைய வேண்டும் என்பதற்காக, இறைமகன் இயேசு வானுலகத்திலிருந்து பூவுலகிற்கு வந்தார். அவர்மக்களுக்குப் புதுமையான போதனைகளைப் போதித்தார். உன்னிடத்தில் நீ அன்பு கூருவது போலபிறனிடத்திலும் அன்பு கூருவாயாக என்று போதித்தார். இது புதுமையானபோதனை. மற்றவர்களிடம் அன்பு செலுத்த முடியும் ஆனால் நம்மில் நாம் அன்பு செலுத்துவது போல பிறரிடம் அன்பு செலுத்த முடியாது. அதனால் தான் இறைமகன் இயேசு போதித்த போதனை புதுமையானது. அவர் போதித்ததோடு விட்டு விடாமல் தம்முடைய வாழ்க்கையில் வாழ்ந்து காட்டியவர். சிலுவையிலே தொங்கி இரத்தமெல்லாம் வழிந்து ஒன்றுமில்லாமல் சோர்ந்து போன நேரத்திலும் தன்னைத் துன்பப்படுத்தியவர்களை மன்னித்தார்.இது தான் இயேசுவின் அன்பு. பாவம் என்னும் நச்சு மரத்தை வேரோடு வெட்டி வீழ்த்தும் கோடரியாக இயேசுவின் போதனை அமைந்தது.

“இருளெலாந் தொலைப்பதுயேசு நாமமே பாவ இருள் எல்லாவற்றையும் இயேசு என்கிற பெயர் மாற்றும். இருளினை மாற்றி வெளிச்சம் நிறைந்த ஒளிமயமான வாழ்வை அளிப்பது இயேசுவின் அன்பு மட்டுமே ஆகும். பாவங்களுக்கெல்லாம் காரணமான சாத்தானின் தலையை நசுக்கி உயிர்த்தெழுந்தவர் இறைமகன் இயேசு. ஒருவன் தவறு நினைக்கும் போது அவனுக்கு அந்த எண்ணம் வராமல் இருக்க பாதுகாப்பானதாக விளங்குவது இறைவனின் அன்பு. அழிந்து போகின்ற இந்த உலகத்தில் ஆசை, பற்று முதலிய சூழ்நிலையில் அகப்பட்டு கொடிய நிலையில் மனிதர்கள் வாழ்ந்தாலும் இறைவன் இயேசு அவர்களின் நிலையை மாற்றிக் கொடுப்பார்.

**கொடியரிற் கொடியபுலையரிற்**
**புலையன் ஆயினுங்குமரநாயகன்**
**அடியருக்கடியனாக வந்திவணடைந்தனன்**
**கதவுதிறமினோ!**

***234***

இயேசுவின் அன்பை உணர்ந்து கொண்டதால் தான் ஆசிரியரால் இயேசு

விடம் வர முடிந்ததை இந்த பாடலடிகளின் மூலம் அறிய முடிகிறது.

**ஐம்பொறிகளையும் நல்வழிப்படுத்தும் அன்பு**

தீய வழியில் மனிதர்களை வழி நடத்திச் செல்லும் பேயைக் கொல்லும் நாமம் இயேசுவின் நாமம். மெய் வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐம்பொறிகளின் இயக்கத்திலே மனிதர்கள் தங்கள் மனத்தைச் செலுத்தி இழிவான செயல்களில் ஈடுபடுகின்றனர். அப்படிப்பட்ட பொல்லாதவர்களாக அறிவில்லாதவர்களாக மக்கள் வாழ்கின்றனர். இறைவனின் மீது பற்று இல்லாதவர்களாக அலைகின்றனர். தசை எலும்பாலாகிய இந்த உடல் விரும்புகிற சிற்றின்பத்தில் பேராசைக் கொண்டு அலைகின்றனர்.

**பொறிவழி யுள்ளம் போக்கிப் புலைநெறி ஒழுகும் பொல்லேன்**
**அறிவிலி யாத லாலே ஆத்துமக் கவலை கொள்ளேன்**
**செறியுடல் போக நச்சித் திரண்டபே ராசை யென்னும்**
**எறிகடல் குளித்து நின்றே னென்செய்வான் தோன்றி னேனே**

***306***

ஐம்பொறிகளின் இயக்கத்தில் மனிதர்கள் தீய செயல்களைச் செய்த போதிலும் அவர்கள் நல்லவர்களாக மாற இயேசுவின் அன்பு போதுமானது. மனிதர்களின் உயிர் மீது இரக்கம் கொண்டதால் தான், தன் உயிரைச் சிலுவையில் தந்தவர். மனிதர்கள் தங்கள் இருதயத்தில் ஓர் அணுவளவும் நன்மையை ஒரு போதும் காண முடியாதவர்களாய் இருந்தாலும் இறைவனின் அன்பு மனிதர்களுக்கு என்றும் இருக்கிறதுஎன்பதனை இதன் மூலம் அறிய முடிகிறது.

**இயேசுவின் அன்பு போதனை**

இந்த உலகத்தில் இறைவன் தருகின்ற நன்மைகள் அனைவருக்கும் கிடைக்கின்றன. மரணத்திற்குப் பிறகும் ஒரு வாழ்க்கை மனிதர்களுக்கு உண்டு என்பதை அறிந்த இயேசு அவர்களுக்குச் சில அறிவுரைகளை வழங்குகிறார். வாழும் காலத்தில் அவர்கள் எப்படி வாழ வேண்டும் என்று கற்றுக்கொடுக்கிறார். மனிதர்கள் மீது அவர் கொண்டிருந்த அன்பை இந்த திருவாக்கின் மூலம் அறிய முடிகிறது.

**அன்புரையருளுரையமுதபிந்துமெய்**
**இன்புரை அறவுரையெவர்க்கும் கிட்டுரை**
**பொன்புரை போதனை பொதிந்த பொன்னுரை**
**என்புருக்கிடுமுரையேசுவின்உரை**

***205***

பூமியிலே மிகுந்த துன்பத்தை அனுபவிப்பவர், சாந்த குணம் உடையவர், இரக்க குணம் கொண்டவர், நீதி செய்பவர்கள், தூய்மையான மனமுடையவர் , சமாதானம் உடையவர், இவர்களெல்லாரும் இறையரசின் அன்புப் பிள்ளைகள். அறத்தின் காரணமாக நீங்காத துன்பத்தை அடைவார்களானால் விண்ணுலக இன்பத்தை அடைய முடியும். கொலைசெய்யக்கூடாது. சினம் கொள்ளக் கூடாது உள்ளதை உள்ளது என்றும் இல்லதை இல்லதென்றும் பேச வேண்டும். அதற்கு மேல் பேசினால் ஒருவரை உயர்த்தி ஒருவரைத் தாழ்த்த நேரிடும். ஒருவருக்கு உதவி செய்ய வேண்டுமெனில் வலது கை செய்கிறது இடது கைக்குத் தெரியக்கூடாது. ஒருவர் சினம் கொண்டு பிறருக்குத் தீமை செய்தாலும் அதை அவர்களுக்கு மன்னிக்க வேண்டும். வானத்துப் பறவைகளைப் பராமரிக்கும் இறைவன் உங்களையும் பாதுகாப்பார். அதனால் எதை உண்போம் எதை உடுப்போம் என்று கவலை கொள்ள வேண்டாம். விண்ணுலகம் செல்லும் வழியை விரும்பி அதனைப் பெற இடைவிடாமல் உண்மையான வழியில் வாழ வேண்டும்.

மனிதர்கள்தங்கள்குற்றங்களைமனதிலே மறைத்து விட்டு பிறருடைய குற்றங்களை ஆராய்ந்துப் பார்ப்பது கொடிய பெரிய மாய்மாலமாகும். மற்றவர்கள் உங்களுக்கு

என்ன செய்ய வேண்டுமென்று மனத்தில் விரும்புகிறீர்களோ அதையே பிறருக்குச் செய்ய வேண்டும். நல்ல எண்ணமும் செயலுமில்லாமல் வெறும் வாயின் வார்த்தையினால் மட்டும் கடவுளே என்று கூப்பிட்டாலும் கடவுள் அவர்களுக்குப் பதில் வழங்குவதில்லை.

***நாயகன்சித்த மறிந்தநந்த நடைகடைப் பிடிப்போன்***
***தூய ராச்சிய பேரின்பந் துய்ப்பவன் அறிமின்***
***499***

கடவுளின் விருப்பத்தை அறிந்து அந்த ஒழுக்கத்தைக் கடைபிடிப்பவன் விண்ணுலகில் பேரின்பம் அனுபவிப்பவன். இயேசு மனிதர்கள் மீது கொண்ட அன்பினால் உயிர் தரும் வார்த்தைகளைக் கூறினார். இதனைப் பின்பற்றுபவர்கள் கற்பாறையின் மேல் வீடு கட்டியவர்கள். பின்பற்றாமல் போனால் மணலின் மேல் வீடு கட்டிய அறிவில்லாதவர்கள் என நல்லுரை வழங்கினார்.

### நிலையான அன்பு

உடலும் உறுப்புகளும் இயங்காமல் சோர்ந்து மூச்சு அடங்கும் நேரத்தில் மனிதர்களுக்குத் துணையாக யாரும் இருக்க மாட்டார்கள். மனிதர்கள் மீது அன்பு கொண்டு தன்னையே சிலுவையில் பலியாகத் தந்த இயேசு எல்லா நேரமும் துணையாக இருப்பார். அதனால் தான் கிருட்டிணப்பிள்ளை அவர்களும்

***மநுவுரு வாய யேசு மலரடிவணங்காய் நெஞ்சே***
***561***

என்று பாடுகிறார்.

இறைவனாகிய இயேசுவை நாம் ஒவ்வொருவரும் நம்பிக்கையுடன் தொழுது கொள்ளும் போது அவர் நம்மை விட்டு விலக மாட்டார் என்று ஆசிரியர் குறிப்பிடுவதைக் காண முடிகிறது.

### முடிவுரை

வெறுக்கத்தக்க மண், பெண், பொன் என்னும் ஆசைகளினின்று விடுபட முடியாமல் சிக்கித்தவிக்கின்ற மக்கள் அன்பு நிறைந்த இயேசுவின் மீது நம்பிக்கை கொள்ள வேண்டும். அப்பொழுது இறைவனின் முழுமையான அன்பைப் புரிந்துக்கொள்ள முடியும். அந்த அன்பு தாயை விட மேலானது. விண்ணுலகத்திலிருந்து மண்ணுலகம் வந்து தன் உயிரையே கொடுத்த அன்பு. மனத்திற்கு ஆறுதல் தந்து பயத்தை மாற்றி பாவத்தை போக்கி வீடுபேற்றுக்கு அழைத்துக் கொண்டு செல்லும் அன்பு. ஐம்பொறிகளின் இயக்கங்களும் நேர் வழியில் செல்ல புதிய போதனைகளை அளித்த அன்பு. நிலையாக என்றென்றும் மனிதர்களிடம் தங்கியிருக்கும் அன்பு என்பதை இக்கட்டுரை வழி அறிய முடிந்தது.